APRIL 2025

62602/246C3A/ 244C3A/245C3A/ 247C3A/248C3A/ 218C3A/217C3A/ 251C3A

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. What do you mean by share?
   பங்கு என்றால் என்ன?

2. Define Underwriting.
   எழுத்துறுதியை வரையறுக்கவும்.

3. What do you understand by capital redemption reserve account?
   மூலதன மீட்புக் காப்பு கணக்கு பற்றி நீவிர் அறிவது யாது?

4. Define Debenture.
   கடனீட்டுப் பத்திரத்தை வரையறுக்க.

5. What do you understand by company final accounts?
   நிறும இறுதி கணக்குகள் பற்றி நீவீர் அறிவது யாது?

6. Give a short note on Shareholders' fund.
   பங்குதாரர்களின் நிதி பற்றி ஒரு சிறு குறிப்பு தருக.

7. Define Goodwill.
   நற்பெயர் வரையறுக்க.

8. X Ltd. has earnings per share of Rs. 60 and is quoted at Rs. 480. Y Ltd. which is a similar firm has a earnings per share of Rs. 48. What should be the value of the share of Y Ltd.?
   எக்ஸ் லிமிடெட், ஒரு பங்கிற்கு ரூ. 60 ஈட்டியது மற்றும் ரூ. 480 என மேற்கோள் காட்டப்பட்டது. ஒய் லிமிடெட், இது போன்ற ஒரு நிறுவனம் பங்கு ஒன்றுக்கு ரூ. 48 ஈட்டியது. ஒய் லிமிடெட் பங்கின் மதிப்பு என்னவாக இருக்க வேண்டும்?

9. What is meant by International Financial Reporting Standard?
   சர்வதேச நிதி அறிக்கை தரநிலை என்றால் என்ன?

10. What does Ind AS 16 cover?

இந்திய கணக்கியல் தரம் 16 எதை உள்ளடக்கியது?

11. What is pro-rata allotment of shares?

விகிதாச்சார ஒதுக்கீட்டுப் பங்குகள் என்றால் என்ன?

12. Give journal entries to record the following in the books of respective companies.

X Company Ltd. redeems 1,00,000 9% preference shares of Rs. 10 each at par out of revenue profit.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஏடுகளில் கீழ்க்கண்டவற்றை பதிவு செய்ய குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

எக்ஸ் கம்பெனி லிமிடெட், 1,00,000 9% முன்னுரிமைப் பங்குகளை வருவாய் லாபத்திற்கு இணையாக ஒவ்வொன்றும் ரூ. 10 வீதம் மீட்டெடுக்கிறது.

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. Pallavan Ltd. has a share capital of 50,000 equity shares of Rs. 100 each. Market value is Rs. 250 per share. The company decides to make a rights issue to the existing shareholders in proportion of one new rights share of Rs. 100 at a premium of Rs. 30 per share for every 5 shares held. Calculate the value of right.

பல்லவன் லிமிடெட் பங்கு முதலாக 50,000 பொதுநிலை பங்குகளை தலா ரூ. 100 வீதம் பெற்றுள்ளது. ஒரு பங்கின் சந்தை மதிப்பு ரூ. 250. தற்போதுள்ள பங்குதாரர்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு 5 பங்குகளுக்கும் ஒரு பங்குக்கு ரூ. 30 முனைமத்தில் ரூ. 100 என்ற ஒரு புதிய உரிமைப் பங்கின் விகிதத்தில் உரிமை வெளியீட்டை மேற்கொள்ள நிறுவனம் முடிவு செய்கிறது. உரிமையின் மதிப்பைக் கணக்கிடுங்கள்.

14. New Limited Issues 1,000, 6% debentures of Rs. 100 each. Give journal entries in each of the following cases:

(a) Issued at par, redeemable at par.

(b) Issued at a discount of 6%, but redeemable at par,

(c) Issued at premium of 5%, but redeemable at par,

(d) Issued at a discount of 4%, repayable at a premium of 5%.

நியூ லிமிடெட் ரூ. 100 வீதம் 1,000, 6% கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டது. பின்வரும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் குறிப்பேட்டு பதிவுகளை தருக.

(அ) முகமதிப்பில் வெளியிட்டு முகமதிப்பில் மீட்டல்

(ஆ) 6% தள்ளுபடியில் வெளியிட்டு, முகமதிப்பில் மீட்டல்,

(இ) 5% முனைமத்தில் வெளியிட்டு, முகமதிப்பில் மீட்டல்,

(ஈ) 4% தள்ளுபடியில் வெளியிட்டு, 5% முனைமத்தில் திருப்பிச் செலுத்துதல்.

15. From the following prepare a statement of Profit or Loss for the year ending 31st December 2018.

	Rs.		Rs.
Gross Profit	27,560	Repairs	1,800
Salaries	4,400	Carriage	1,600
Rent	1,200	Bad debts	240
Miscellaneous expenses	1,000	Interest received	260
Postage	560	Dividend received	220
Telegram	520	Tax	320

பின்வருவனவற்றிலிருந்து 31 டிசம்பர் 2018 உடன் முடிவடையும் ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்ட அறிக்கையை தயாரிக்கவும்.

	ரூ.		ரூ.
மொத்த லாபம்	27,560	பழுதுபார்ப்பு	1,800
சம்பளம்	4,400	வண்டி கூலி	1,600
வாடகை	1,200	வாரகடன்கள்	240
இதர செலவுகள்	1,000	வட்டி பெற்றது	260
தபால்	560	பங்காதாயம் பெற்றது	220
தந்தி	520	வரி	320

16. From the following information, calculate the value per equity share:

1,000 9% preference shares of Rs. 100 each	Rs. 1,00,000
1,00,000 equity shares of Rs. 5 each, Rs. 2 per share paid up	Rs. 2,00,000
Expected profits per year before tax	Rs. 1,09,000
Rate of tax	50%
Transfer to general reserve	20% of the net profits.

பின்வரும் தகவல்களிலிருந்து ஒரு பொதுநிலை பங்குக்கான மதிப்பைக் கணக்கிடு.

1,000, 9% முன்னரிமை பங்குகள் ரூ. 100 வீதம்	ரூ. 1,00,000
1,00,000 பொதுநிலை பங்குகள் ரூ. 5 வீதம், ஒரு பங்கிற்கு ரூ. 2 செலுத்தியது	ரூ. 2,00,000
வரிக்கு முன் ஓர் ஆண்டுக்கு எதிர்பார்க்கப்படும் இலாபம்	ரூ. 1,09,000
வரி விகிதம்	50%
ஒவ்வொரு ஆண்டும் பொதுக்காப்புக்கு மாற்றுவது	நிகர லாபத்தில் 20%

17. Explain the objectives of Indian Accounting Standards (Ind AS).

இந்திய கணக்கியல் தரநிலைகளின் (Ind AS) நோக்கங்களை விளக்கவும்.

18. A Company has fixed assets of Rs. 2,00,000 and profit after depreciation @ 5% p.a. is Rs. 80,000 and the Income tax limit for depreciation is Rs. 8,000. Calculate:

(a) 5% of the Net Profit as commission to Manager.

(b) Tax provision at 50%

ஒரு நிறுவனம் பெற்றுள்ள நிலை சொத்து ரூ. 2,00,000 மற்றும் ஆண்டுக்கு 5% தேய்மானத்திற்குப் பிறகு லாபம் ரூ. 80,000 மற்றும் தேய்மானத்திற்கான வருமான வரி வரம்பு ரூ. 8,000 கணக்கிடுக:

(அ) மேலாளருக்கான கழிவு நிகர லாபத்தில் 5% ஆகும்.

(ஆ) வரி விதிப்பு 50% ஆகும்.

19. What are the various methods of valuation of goodwill?

நற்பெயர் மதிப்பிடுவதற்கான பல்வேறு முறைகள் யாவை?

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. A Ltd. invited applications for 10,000 shares of Rs. 100 each at a discount of 5% payable as follows:

On application	Rs. 25
On allotment	Rs. 34
On first & final call	Rs. 36

Applications were received for 9,000 shares and all of these were accepted. All moneys due were received except the first and final call on 100 shares which were forfeited. Of these forfeited shares, 50 shares were reissued at the rate of Rs. 90 as fully paid. Show necessary journal entries in the books of the company.

A லிமிடெட் ரூ. 100 வீதம் 10,000 பங்குகளை 5% தள்ளுபடியில் பின்வருமாறு செலுத்து வண்ணம் விண்ணப்பங்களை வரவேற்றது:

விண்ணப்பத்தில்	ரூ. 25
ஒதுக்கீட்டில்	ரூ. 34
முதல் மற்றும் இறுதி அழைப்பில்	ரூ. 36

9,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு இவை அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 100 பங்குகளுக்கான முதல் மற்றும் இறுதி அழைப்பைத் தவிர அனைத்து தொகையும் பெறப்பட்டது. இப்பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளில், 50 பங்குகள் ரூ. 90 வீதம் முழுவதும் செலுத்தப்பட்டவையாக மறுவெளியீடு செய்யப்பட்டது. நிறுவன ஏடுகளில் தேவையான குறிப்பேட்டு பதிவுகளை காட்டுக.

21. The Balance sheet of Exchange Ltd., as on 31-12-2018 was follows:

Liabilities	Rs.	Assets	Rs.
Share capital:		Sundry assets	9,20,000
50,000 equity shares of Rs. 10 each fully paid	5,00,000	Bank balances	6,00,000
4,000 Redeemable preference shares of Rs. 100 each fully paid	4,00,000		
Profit & Loss account	5,20,000		
Creditors	1,00,000		
	15,20,000		15,20,000

On the above date, the preference shares were redeemed at a premium of 10%. You are required to pass journal entries and give the amended balance sheet.

31-12-2018 தேதியின்படி எக்ஸ்சேஞ்ச் லிமிடெட் இருப்புநிலை பின்வருமாறு:

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
பங்கு முதல்:		பல்வகை சொத்துக்கள்	9,20,000
50,000 பொதுநிலை பங்குகள் ரூ. 10 வீதம் முழுவதும் செலுத்தப்பட்டது	5,00,000	வங்கி இருப்புகள்	6,00,000
4,000 மீட்பு முன்னுரிமை பங்குகள் ரூ. 100 வீதம் முழுவதும் செலுத்தப்பட்டது	4,00,000		
இலாப நட்ட கணக்கு	5,20,000		
கடனீந்தோர்கள்	1,00,000		
	15,20,000		15,20,000

மேலே குறிப்பிட்டுள்ள தேதியில், முன்னுரிமை பங்குகள் 10% முனைமத்தில் மீட்டெடுக்கப்பட்டன. உமக்கு தேவையான குறிப்பேட்டு பதிவுகளை தந்து மேலும் திருத்தப்பட்ட இருப்புநிலை குறிப்பையும் தருக.

22. From the following balances, prepare Balance sheet of a company in the prescribed format. Goodwill Rs. 1,50,000; Investments Rs. 2,00,000; Share capital Rs. 5,00,000: Reserves Rs. 1,10,000; Share premium Rs. 15,000; Preliminary expense Rs. 10,000; Profit and Loss account (Cr) Rs. 25,000; Debentures Rs. 2,50,000. Other fixed assets Rs. 4,70,000; Stock Rs. 80,000; Debtors Rs. 60,000; Bank balances Rs. 30,000; Unsecure loan Rs. 65,000; Sundry creditors Rs. 35,000.

பின்வரும் இருப்புகளிலிருந்து, ஒரு நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பை நிர்ணயிக்கப்பட்ட வடிவத்தில் தயாரிக்கவும். நற்பெயர் ரூ. 1,50,000; முதலீடுகள் ரூ. 2,00,000; பங்கு முதல் ரூ. 5,00,000; காப்புகள் ரூ. 1,10,000; பங்கு முனைமம் ரூ. 15,000; முதன்மை செலவு ரூ. 10,000; இலாப நட்டக் கணக்கு (வரவு) ரூ. 25,000; கடனீட்டுப் பத்திரங்கள் ரூ. 2,50,000. பிற நிலையான சொத்துக்கள் ரூ. 4,70,000; சரக்கிருப்பு ரூ. 80,000; கடனாளிகள் ரூ. 60,000; வங்கி இருப்புகள் ரூ. 30,000; பிணையமில்லாக் கடன் ரூ. 65,000; பற்பல கடனீந்தோர்கள் ரூ. 35,000.

23. From the following particulars, find out the value of goodwill as per annuity method:

(a) Capital employed Rs. 3,00,000

(b) Normal rate of return 10%

(c) Present value of Rs. 1 for five years at 10% as Rs. 3.78

(d) Normal profit for five years: I year Rs. 30,000; II year Rs. 32,000: III year Rs. 34,000: IV year Rs. 36,000; V year Rs. 38,000.

(e) Non-recurring income Rs. 1,600; Non-recurring expenses Rs. 1,000.

பின்வரும் விவரங்களிலிருந்து, ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பை கணக்கிடு.

(அ) பயன்படுத்தப்பட்ட முதல் ரூ. 3,00,000

(ஆ) சாதாரண வருவாய் விகிதம் 10%

(இ) ரூ. 1க்கு ஐந்து ஆண்டுகளுக்கு 10% க்கு தற்போதைய மதிப்பு ரூ. 3.78 ஆகும்.

(ஈ) ஐந்து ஆண்டுகளுக்கு சாதாரண லாபம்: முதல் ஆண்டு ரூ. 30,000; இரண்டாம் ஆண்டு ரூ. 32,000; மூன்றாம் ஆண்டு ரூ. 34,000; நான்காம் ஆண்டு ரூ. 36,000; ஐந்தாம் ஆண்டு ரூ. 38,000.

(உ) திரும்ப திரும்ப நிகழா வருமானம் ரூ. 1,600; திரும்ப திரும்ப நிகழா செலவுகள் ரூ. 1,000.

24. Explain the significance of Ind AS and its impact on the Indian financial reporting landscape.

இந்திய கணக்கியல் தரத்தின் முக்கியத்துவம் மற்றும் இந்திய நிதி அறிக்கை நிலப்பரப்பில் அதன் தாக்கத்தை விளக்குங்கள்.

———————